# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2398/13 - 2024 අගෝස්තු මස 20 වැනි අඟහරුවාදා - 2024.08.20

*2398/13 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.- 5/1986* (II)

**1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, உரச் சட்ட ஒழுங்குவிதி**

*1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, உரச் சட்ட ஒழுங்குவிதியின் 6 ஆம் பிரிவு மற்றும் 8 ஆம் பிரிவு ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 28 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த அமரவீர,**
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட தொழில் அமைச்சர்.

பத்தரமுல்ல,
*2024, யூலை 25.*

**ஒழுங்குவிதிகள்**

*2010, திசெம்பர் 6 ஆந் திகதிய 1683/ 5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உர (இறக்குமதி, உற்பத்தி மற்றும் வகுத்தமைத்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

1. அதன் 3 ஆம் ஒழுங்குவிதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

“3. உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் தொடர்பில் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.-

(அ) உரத்தை இறக்குமதி செய்வதற்கான உரிமம் ஒன்று - ரூபா 150,000.00
(ஆ) அசேதன உரத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் ஒன்று - ரூபா 150,000.00
(இ) சேதன அல்லது சூழல் நேய உரத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் ஒன்று - ரூபா 20,000.00
(ஈ) உரத்தை வகுத்தமைப்பதற்கான உரிமம் ஒன்று - ரூபா 150,000.00


1A - PG 6832 — 504 (2024/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

"ஆயின், தனது சொந்தப் பாவனையின் நிமித்தம் சேதன அல்லது சூழல் நேய உரத்தை உற்பத்தி செய்கின்ற ஆளொருவர் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம் ஒன்றைப் பெறுவதற்கு தேவைப்படுத்துதலாகாது."; அத்துடன்

2. அதன் 4 ஆம் ஒழுங்குவிதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

"4. உரிமம் ஒன்றினைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் தொடர்பில் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.-

(அ) உரத்தை இறக்குமதி செய்வதற்கான உரிமம் ஒன்று - ரூபா 100,000.00
(ஆ) அசேதன உரத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் ஒன்று - ரூபா 100,000.00
(இ) சேதன அல்லது சூழல் நேய உரத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் ஒன்று - ரூபா 15,000.00
(ஈ) உரத்தை வகுத்தமைப்பதற்கான உரிமம் ஒன்று - ரூபா 100,000.00

EOG 08-0240

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.